**சுருக்கம்**

நில எடுப்பு – சென்னை மாவட்டம் – எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம் – பிளாக் எண்.24 – புல எண்கள்.384/1, 5 மற்றும் 6 களில் 941 சதுர அடியில் குருசாமி மேம்பாலம் மற்றும் ஈ.வெ.ரா. சாலை சந்திப்பில் உள்ள சாலையினை அகலப்படுத்துவதற்காக ரூ.68,81,100/– செலவில் – தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.149 நாள்: 05.08.2010

ஆடி – 20,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19941/2009, நாள் 20.10.2009 மற்றும் 24.03.2010

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட சென்னை முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதங்களில் சென்னை மாவட்டம், எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் எண்.24 புல எண்கள்.384/1, 5 மற்றும் 6 களில் 941 சதுர அடியில் குருசாமி மேம்பாலம் மற்றும் ஈ.வெ.ரா. சாலை சந்திப்பில் உள்ள சாலையினை அகலப்படுத்துவதற்காக தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்க கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பி உள்ளார் எனவும், இந்நேர்வில் நிலஎடுப்புக்கு பரிந்துரை செய்யப்பட்ட நிலங்களை எழும்பூர் – நுங்கம்பாக்கம் தாலூக்கா வட்டாட்சியர் 28.07.2009 அன்று கூட்டு புலத்தணிக்கை செய்துள்ளார் என்றும் நிலஎடுப்புக்குட்பட்ட புலங்களில் கட்டுமானங்களோ, கோயில் மதசார்புடைய புராதனச் சின்னங்களோ எதுமில்லை என்றும் இந்நிலஎடுப்புக்குட்பட்ட 941 சதுர அடி நிலத்திற்கு தோராய நிலமதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு பெரியமேடு சார்பதிவாளர் அலவலகத்திலிருந்து வழிகாட்டி பதிவேட்டின் மதிப்புக்கான விவரம் வட்டாட்சியரால் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு சதுர அடி 1க்கு ரூ.5000/– வீதம் நில மதிப்பு கணக்கிடப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| 1) | நில மதிப்பு 941 சதுர அடிக்கு சதுர அடி 1க்கு ரூ.5000/– வீதம் (மரம் கட்டுமானப் மதிப்பு ஏதுமில்லை) | ரூ.47,05,000/– |
| 2) | 30% ஏற்றதாழ்வு ஈடு | ரூ.14,11,500/– |
| 3) | 12% கூடுதல் சந்தை மதிப்பு | ரூ.5,64,600/– |
| | மொத்தம் | ரூ.66,81,100/– |

எனவும் இந்நிலஎடுப்பிற்கான கையகப்படுத்தும் நிலமானது கீழ்கண்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்:

| வ.எண். | புல எண். | கையகப்படுத்தப்படும் நிலத்தின் பரப்பு | வகைபாடு |
|---|---|---|---|
| 1. | 384/1 | 246 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| 2. | 384/5 | 506 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| 3. | 384/6 | 189 சதுர அடி | ரயத்துவாரிமனை |
| | மொத்தம் | 941 சதுர அடி | |

மேலும் இந்நேர்வில் குறிப்பிடப்படும் 941 சதுர அடி தனியார் நிலத்தினை கையகபடுத்த சென்னை மாநகராட்சி மன்றத்தின் தீர்மானம் எண்.462/2009, நாள் 30.11.2009 ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் நிலங்கள் நகர்புற நில உச்சவரம்பு திட்டத்தின் கீழ் கவரப்படவில்லை என தெரிவித்துள்ளார். மேற்படி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஏற்று முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூர் கிராமம், பிளாக் எண்.24, புல எண்கள்.384/1, 5 மற்றும் 6 களில் 941 சதுர அடியில் குருசாமி மேம்பாலம் மற்றும் ஈ.வெ.ரா. சாலை சந்திப்பில் உள்ள சாலையினை அகலப்படுத்துவதற்காக தோராயமான நில மதிப்பு ரூ.66,81,100/– (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சத்து எம்பத்தி ஒருயிரத்து நூறு மட்டும்) செலவில் தனியார் நிலங்களை கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை வருவாய் மற்றும் நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா.கு.எண்.24816/நிநி2/10–1, நாள் 08.06.2010 மற்றும் 32320/ந.நி.ம.கு.வ/10, நாள் 17.06.2010).

/ ஆளுநரின் ஆணைப்படி /

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3
<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்